Registered as a Newspaper

A/L 87
Physics
Current Electricity
ஆரம்பம்: 01-02-1987
ஆசிரியர்:
திரு. வர்ணம்
New Master
Institute
B.M.C Lane JAFFNA.

# உதயன்

விலை ரூ-1/-

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

A/L 87
நடைபெறுகிறது
Physical Chemistry
ஆசிரியர்:
திரு. தில்லைநாதன்
New Master
INSTITUTE
B. M.C. Lane,
JAFFNA.

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு தை மீ 13 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமாதி அவ் பிறை 25 (26-01-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY ஒளி 51

# ஆனையிறவு முகாமில் பஸ்களுக்கு டீசல்

## சென்று பெறுவதா என

## வ.பி.போ.ச. இன்று தீர்மானிக்கும்

— அலுவலகச் செய்தியாளர்: கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், ஜனவரி 26

**வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களுக்கு ஆனையிறவு முகாமில் அல்லது கிளிநொச்சி பஸ் டிப்போவில் வைத்து டீசல் (எரிபொருள்) வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது.**

**எனினும் வாகனங்கள் அங்கு சென்று டீசல் (எரிபொருள்) பெறுவது குறித்து வடபிராந்திய போக்குவரத்துச் சபை இன்று கூடி முடிவு செய்யும்.**

வடபகுதிக்கான எரிபொருள் தடையை அடுத்து வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்கள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன.

ஊழியர்களுக்கான சம்பளப் பணம் வழங்குவதற்குக் கூட வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு எஸ். கனகரத்தினம் கொழும்பு சென்று போக்குவரத்து அமைச்சருடன் தொடர்புகொண்டார்.

போக்குவரத்து பஸ்களுக்குத் தேவையான எரிபொருளையாவது வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

ஆனால் அரசாங்கம் ஆனையிறவு முகாமில் அல்லது கிளிநொச்சி டிப்போவில் வைத்து மட்டுமே பஸ்களுக்கு எரிபொருள் விநியோகிக்க முடியும் என்றும், ஒரே மொத்தமாக குடாநாட்டுக்கு எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படமாட்டாது எனவும் அறிவித்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் பதற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 26

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து சனிக்கிழமை இரவு ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இரவு 11 மணியில் இருந்து அதிகாலை 1 மணி வரை சிப்பாய்கள் தொடர்ந்து ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இதனை அடுத்து விடுதலைப் புலிகளும் பதிலுக்கு முகாம்மீது ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனால் இப்பகுதியில் பதற்றம் நிலவியது

(இ-10)

முச்சந்தி முனி



பஸ்களுக்கு எண்டாலும் அள்ளிக் குடுக்காமல் கிள்ளிக் குடுக்க வேணும் எண்டு நினைச்சிட்டினமோ!

## ஜேம்ஸ்பொண்ட் பாக்கினுள் வெடி மருந்து

கொழும்பு, ஜன. 26

கொழும்புகோட்டைப் பகுதியில் பழைய பொலீஸ் நிலையக் கட்டடத்துக்கு அருகில் வெடி மருந்து வகைகளும் குறித்த நேரத்தில் வெடிக்கும் குண்டு தயாரிக்கும் சாதனங்களும் அடங்கிய ஜேம்ஸ்பொண்ட் பாக் ஒன்றைப் பொலீஸார் கண்டு எடுத்தனர்.

இப்படி கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக் காலை இவை கண்டுபிடிக்கப்பட்டன என்று அறிவிக்கப்படுகிறது.

(இ-எ)

# குடாநாட்டில் வெள்ளியன்று ஹர்த்தால்

## எரிபொருள் தடையையும் மட்டுநகர் படுகொலைகளையும் கண்டித்து நடத்த ஏற்பாடு

— அலுவலகச் செய்தியாளர்: எஸ். ஜே. பி. ரட்ணதுரை —

யாழ்ப்பாணம், ஜன. 26

**எதிர்வரும் வெள்ளிக்கிழமை குடாநாடு முழுவதிலும் பூரண ஹர்த்தாலை அனுஷ்டிப்பதென நேற்று நடைபெற்ற பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.**

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பில் நடைபெற்றுவரும் படுகொலைகள், கற்பழிப்புகள், இராணுவ அட்டூழியங்களைக் கண்டிக்கு முகமாகவும்—

வடபகுதிமீது அரசு விதித்துள்ள பொருளாதார தடைகளை எதிர்க்கு முகமாகவும் இந்த ஹர்த்தால் நடத்தப்பட உள்ளது.

அரச அலுவலகங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள், கடைகள், போக்குவரத்துச் சேவைகள், பாடசாலைகள் என்பன இயங்காதவாறு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

(இ-5)

## எரிபொருள் தடைபற்றி இன்று ஆராய்வு

இன்று திங்கள் நடைபெறும் தேசியபாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் வடபகுதி மீது விதிக்கப்பட்டுள்ள எரிபொருள் தடை குறித்து ஆராயப்படும்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி இதனைத் தெரிவித்தார். (இ-எ)

## ஆனையிறவு தடைமுகாம்

## 5 மணிச் சட்டத்தால் பயணிகள் அவதி

யாழ்ப்பாணம், ஜன. 26

ஆனையிறவு தடைமுகாமில் ஏற்படுத்தப்பட்ட 5 மணிச் சட்டம் காரணமாக ஏராளமான பயணிகள் பெரும் அவலநிலைக்கு உள்ளாகின்றனர்.

ஐந்து மணிக்குப் பிந்தி வரும் எந்த வாகனத்தையும் முகாமைத் தாண்ட சிப்பாய்கள் அனுமதி வழங்குகிறார்கள் இல்லை.

இதன் காரணமாக இதற்குப் பின்னர் வரும் பஸ்களின் பயணிகள்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

# காங்கேசன்துறையில் ஷெல் தாக்குதல்

காங்கேசன்துறை, ஜன. 26

காங்கேசன்துறை 'குவாரி' முகாமிலிருந்து நேற்று மாலை ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. ஒரு ஷெல் கொல்லங்கலட்டியில் சைக்கிள் கடை ஒன்றின் முன்னால் விழுந்து வெடித்தது.

இரண்டு உள்ளூர் வாசிகளுக்கு சிறு காயம் ஏற்பட்டது. சில சைக்கிள்களும் சேதம் அடைந்தன.

முதலில் காங்கேசன்துறை ஹார்பர்வியூ ஹோட்டலில் உள்ள ஆயுதப் படையினர் ஷெல் தாக்குதல் நடத்தினர். அப்போது ஒரு ஷெல் சிமெந்து தொழிற்சாலை வளவுக்குள் விழுந்து வெடித்தது. இதில் எவரும் காயம் அடையவில்லை.

இந்த ஷெல் தாக்குதல் போராளிகளினால் நடத்தப்பட்டது என்ற எண்ணத்தில், காங்கேசன்துறை 'குவாரி' முகாமில் இருந்து படையினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர் என்று தெரிய வருகிறது.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

போராளிகள் அப்பகுதியில் நடமாடத் தொடங்கினர். கடைகள் மூடப்பட்டன. (இ-எ-68)

# தொலைத்தொடர்பு நிலையத்துக்கு பொறியியலாளரை தந்திரமாக அழைத்த இராணுவத்தினர்!

யாழ்ப்பாணம், ஜனவரி 26

யாழ். தொலைத் தொடர்பு நிலையப் பொறியியலாளர்களை சிப்பாய்கள் தந்திரமாக தம்மிடம் அழைத்த சம்பவம் ஒன்று சில தினங்களுக்கு முன் இடம்பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

யாழ். தொலைத் தொடர்பு நிலைய அதிகாரி ஒருவர் உட்பட 4 உத்தியோகத்தர்களை மாநாடு ஒன்றுக்காக கொழும்பு வரும்படி திணைக்களம் அழைத்திருந்தது.

கொழும்பு சென்ற அவர்கள் அங்கிருந்து விமானமூலம் பலாலி கொண்டு வரப்பட்டனர்.

பலாலியிலிருந்து ஹெலி மூலம் மண்டைதீவுக்குக் கொண்டு செல்லப்பட்டு கோட்டைக்கு அழைக்கப்பட்டனர்.

அங்கிருந்து இராணுவ மினிமுகாமாக மாறியுள்ள தொலைத்தொடர்பு நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர்கள் அங்குள்ள உபகரணங்களில் உள்ள திருத்த வேலைகளைச் செய்யுமாறு பணிக்கப்பட்டனராம்.

பாரிய பிழைகள் இருப்பதைக் கண்டுபிடித்த தொலைத் தொடர்பு அதிகாரிகள் அவற்றைத் திருத்துவதற்கு ஜப்பானிலிருந்து பொறியியலாளரை அழைக்க வேண்டும் எனக் கூறினராம்.

சிப்பாய்கள் அவர்களை மீண்டும் வரும்படி பணித்து வெளியே அனுப்பி வைத்தனராம்.

(இ-5)

# இந்தியாவுடன் சேர்ந்து வாழ உடன்பாடு காண வேண்டும்

## அமைச்சர் கருத்து

கொழும்பு, ஜன. 26

இந்தியாவுடன் சேர்ந்து வாழ நாம் பழக வேண்டும். இது சம்பந்தமாக இந்தியாவுடன் உடன்பாடு ஒன்று காணப்படவேண்டும்.

இவ்வாறு கொழும்பில் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்,

கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகையான "சண்டே ஐலண்ட்" இது குறித்துத் தகவல் வெளியிட்டுள்ளது

வெளியுறவுக் கொள்கை சம்பந்தமான பிரச்சினைகள் பெரிய அயல் நாடுகளுடன் சிறிய நாடுகளுக்கு ஏற்படுவது வழக்கம்—

இந்தியாவுடன் சேர்ந்து வாழ நாம் பழக வேண்டும்—

இது சம்பந்தமாக இந்தியாவுடன் உடன்பாடு ஒன்று காணப்பட வேண்டும்—

இல்லாவிடில் அவர்கள் ஏன் எமக்கு உதவ வேண்டும். வேறு நாம் என்ன செய்யலாம்?—

இவ்வாறு பெயரை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பதுங்கி இருந்த சிப்பாய் டிராக்டர் மீது சூடு!

## வேலங்குளத்தில் போராளி மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 26

பதுங்கி இருந்த சிப்பாய்கள் விடுதலைப் புலிகளின் டிராக்டர் மீது திடீர் தாக்குதல் நடத்தினர் இதனால் போராளி ஒருவர் மரணமானார்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள வேலங்குளம் பகுதியில் சனிக்கிழமை பிற்பகல் 2 மணி அளவில் இச்சம்பவம் நடந்தது.

வேலங்குளம் பகுதியூடாக விடுதலைப் புலிகள் டிராக்டரில் சென்று கொண்டிருந்தபோது அங்கு ஏற்கனவே வந்து படுத்திருந்த சிப்பாய்கள் இவர்கள் மீதுதுப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர்.

இதனை எதிர்த்து விடுதலைப் புலிகளும் அவர்கள் மீதுதாக்குதல் நடத்தினர்.

சிப்பாய்களின் தொடர்ச்சியான தாக்குதலினாலேயே போராளி மரணமானார்.

(இ-10)

## வீரவணக்கம்

யாழ்ப்பாணம், ஜன 26

வேலன்குளத்தில் வீர மரணமடைந்த இரண்டாவது லெப்டினன்ட் தேசனுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

(இ-10)

## இரவு நடந்த ஷெல் அடி

# கிளிநொச்சியில் ஒருவர் மரணமானார்

யாழ்ப்பாணம், ஜன. 26

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து சனிக்கிழமை இரவுஏவப்பட்ட ஷெல் குண்டுகள் காரணமாக ஒருவர் பலியானார்.

இருவர் காயமடைந்தனர். இரண்டு கடைகள் சேதம் அடைந்தன.

சனிக்கிழமை இரவு 11 மணி அளவில் இத்திடீர் ஷெல் தாக்குதல்கள் பரந்தனை நோக்கி மேற்கொள்ளப்பட்டன.

சுமார் ஐந்துக்கும் அதிகமான ஷெல்குண்டுகள் பரந்தன் சந்தியிலும் பரந்தன் மரக்கறிச் சந்தைக்குள்ளும் விழுந்து வெடித்தன.

இதன் காரணமாகவே சந்தைக்குள் படுத்திருந்த இருவர் காயமடைந்ததுடன், ஒருவர் நெஞ்சு பிளந்த நிலையில் மரணமானார். இவரின் மனைவி இடுப்பில் காயமடைந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

காயமடைந்தவரான மற்றவர் பரந்தனைச் சேர்ந்த எஸ். கந்தையா (65 வயது)

இவர் பரந்தன் சந்தையில் உள்ள வெற்றிலைக் கடைகளுக்கு காவலாளியாக கடமைபுரிந்து வருகிறார்.

இவருக்கு வயிற்றிலும் காலிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

யாழ் ஆஸ்பத்திரியில் இவர் சேர்க்கப்பட்டுள்ளார். (இ-10)

## சுபநேரம்

26—01—1987

திங்கட்கிழமை

சுபநேரம்:

12.36 முதல் 2.06 வரை

ராகுகாலம்:

8 06 முதல் 9 36 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## மின்னல் செய்தி

# டோர்ச் லையிற் பிடிக்க அனுமதி இல்லை!

முள்ளியவளை, ஜன. 26

முல்லைத்தீவு ஆஸ்பத்திரிச் சுற்றாடலில் உள்ள வீடுகளில் வசிப்பவர்கள் இரவு 7 மணிக்குப்பின்னர் டோர்ச்லையிற் வெளிச்சத்துடன் வெளியே நடமாடக் கூடாது

இப்படி சுற்றுடலில் வசிப்பவர்கள் எச்சரிக்கப் பட்டுள்ளனர்.

அண்மையில் முல்லைத்தீவு ஆஸ்பத்திரிச் சந்தியில் காவலில் நின்ற ஆயுதப்படையினர் இரவு 8 மணி போல் டோர்ச்லையிற் வெளிச்சம் தெரிந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய - பாக். நெருக்கடி

# புதிய பாதுகாப்பு அமைச்சருடன்

## முப்படைத் தளபதிகள் ஆலோசனை

புதுடில்லி, ஜன 26

இந்திய – பாகிஸ்தான் எல்லை நெருக்கடி நிலை குறித்து இந்தியாவின் முப்படைத் தளபதிகளும் புதிய பாதுகாப்பு அமைச்சர் விஸ்வநாத் பிரதாப் சிங்குடன் மந்திராலோசனை நடத்தினர்.

இதனிடையில் இந்திய – பாகிஸ்தான் எல்லைப் பிரதேசத்தில் இரவு 9 மணி முதல் காலை 5 மணி வரை மக்கள் நடமாடத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இத்தடை ஒரு மாத காலத்துக்கு அமுலில் இருக்கும்.

எல்லைப்புறப் பாதுகாப்பைப் பலப்படுத்தும் ஒரு கட்டமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது (இ-எ)

## வைத்திய அதிகாரியின் சைக்கிள் விபத்தில்

யாழ் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த வைத்திய அதிகாரிஒருவர் நேற்று விபத்தில் சிக்கிக் கொண்டார். எனினும் அவருக்கு எவ்வித பாதிப்பும் இல்லை.

எரிபொருள் தடை காரணமாக சைக்கிளில் கடமைக்கு வரும் அந்த டாக்டர்நேற்றும்வழமை போல் ஆஸ்பத்திரி வீதி வழியாக்கடமைக்குவந்து கொண்டிருந்த பொழுது 'ஸ்கூட்டர்' ஒன்று இவருடையசைக்கிளை மோதியது எனினும்இவர் சாதுரியமாக தப்பிக் கொண்டார். (இ-10)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★

தேவை

இயந்திரஇயக்குநர்கள் தேவை. ஹைடில்பேர்க் (HEIDELBERG) அச்சு இயந்திரத்தில் கடமையாற்றிய அனுபவமுள்ளவராக இருக்க வேண்டும். விளம்பர எண்: 43, மே/பா உதயன். யாழ்ப்பாணம்.

பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு படப்பிடிப்பாளர் தேவை. படப்பிடிப்புடன் சம்பந்தப்பட்ட தொழில் நுட்பம் தெரிந்தவராக இருக்க வேண்டும். விளம்பரஎண்: 42, மே/பா. உதயன், த. பெ. எண்; 23, யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு

பழைய பத்திரிகைகள் விற்பனைக்குண்டு எழுத்துமூலம் விலைகள் கோரப்படுகின்றன. விளம்பரதாரர், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

## புங்குடுதீவில் இலவச பாட நூல்கள்

புங்குடுதீவு, ஜன. 26

புங்குடுதீவு வட்டாரப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாட நூல்கள் கடந்த புதன்கிழமை புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டன.

புங்குடுதீவு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. இ. ஆறுமுகம் இப்பாட நூல்களை விநியோகித்தார்.

ஒரு சில வகுப்புகளுக்குரிய பாட நூல்களே இது வரை விநியோகிக்கப்பட்டுள்ளன.

கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி போன்ற முக்கிய பாடங்களுக்கான புதிய நூல்கள் கிடைக்காததால் மாணவர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். (இ-31)

### கரபந்தாட்டம்

திரு. சு. ஐயாத்துரை அவர்களின் நினைவாக கரவெட்டி கிழக்கு யார்க்கரு சனசமூக நிலையம் நடத்தும் கரபந்தாட்ட (ஓவர்) ஒரு நாள் சுற்றுப்போட்டி நாளை நடைபெறும். (உ)

# கிழக்கை மூன்றாக துண்டாடுவதா?

## கல்முனை தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை அமைப்பு எதிர்ப்பு

கல்முனை, ஜன. 26

கிழக்கு மாகாணம் மூன்றாகப் பிரிக்கப்பட வேண்டும் என்ற யோசனைக்கு கிழக்கில் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

கல்முனை தமிழ் – முஸ்லிம் ஒற்றுமை அமைப்பின் பொதுச்செயலாளர் ஜனாப் எம் எச். ராஜா முகமது விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது!

கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் அனுமதியைப் பெறாமல், இப்படியான யோசனைகளைத் தெரிவிப்பது இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு பெரும் குந்தகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாகாண ஆட்சி முறையைக் கொண்டு வரப் போகின்றோம், என மருடிகாட்டி உலக நாடுகளையும், தமிழ் பேசும் மக்களையும் அரசு ஏமாற்றிக் கொண்டிருக்கிறது.

இந்த அரசாங்கம், இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாகச் சொல்லிக் கொண்டு திம்பு,டில்லி,சார்க்மாநாடுகளில் சமர்ப்பித்த கோரிக்கைகளைப் பார்க்கும் போது, அரைத்த மாவையே, திருப்பத் திரும்ப அரைப்பது போன்றிருக்கின்றது

முஸ்லிம் மாகாணம், தமிழ் மாகாணம் என்னும் பிரச்சினைகளைப் பார்த்தால், பூனைகள் இரண்டும் சண்டை போட குரங்கு அப்பம் பிரித்த கதையாகிவிடும்.

முஸ்லிம் மாகாண அமைப்பு கிழக்கு மாகாணத்தை கிள்ளுக்கிரை போன்று துண்டு துண்டாக கூறுபோடப் பார்க்கின்றது

இது எந்த வகையிலும் முஸ்லிம்கள் சுதந்திரமாக வாழ முடியாத ஒரு அமைப்பு ஆகும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது (இ-84)

## மக்கள் முகம்

### கெருடாவில் ஐக்கிய நாணய சங்கம்

வல்வெட்டித்துறை, ஜன. 26

கெருடாவில் ஐக்கிய நாணய சங்க உத்தியோகத்தர் தெரிவு அண்மையில் கெருடாவில் சனசமூக முன்றலில் நடைபெற்றது.

பின்வருவோர் உத்தியோகத்தராக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் : திரு மு. இரத்தினம், உப தலைவர் : திரு. கா கனகரத்தினம், செயலாளர் : திரு வெ. பிறேமச்சந்திரன், பொருளாளர் : திரு. கா. அரசரத்தினம்.

9 பேர் கொண்ட உப குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (இ-160)

### கட்டடத்துக்கு நிதி

யாழ்ப்பாணம் ஜன 26

நல்லூரில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள கமநலசேவைத் திணைக்கள கட்டடத்திற்காக யாழ் மாநகரசபை 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை கொடுத்துதவியுள்ளது.

கமநல சேவைத்திணைக்கள சிரேஷ்ட உதவிஆணையாளர் திரு க. பரமலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

இப்புதிய கட்டடம் 3 இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

## தீவிரவாதியென நினைத்துசகாஒருவரை சுட்டஊர்காவல்படையினர்

திருகோணமலை, ஜன. 26

தீவிரவாதி என்று நினைத்து சகா ஒருவரையே சுட்டுக்கொன்றனர் ஊர்காவல் படையினர்.

இச்சம்பவம் திருகோணமலையில் இடம் பெற்றது.

இறந்தவரின் பெயர் ஏ. சி. சம்சுதீன்.

இதுபற்றிய மரணவிசாரணையில் தெரிய வந்ததாவது!

இரண்டு ஊர்காவல் படையினர் தேன் எடுக்கச் சென்று இருந்தனர்.

அப்போது பற்றைக்குள் சத்தம்கேட்டது தீவிரவாதி என்று நினைத்து இரண்டு ஊர்காவல் படையினரும் பற்றைக்கு சுட்டனர். பின்னர் அருகில் சென்று பார்த்த போது இன்னொரு ஊர்காவல் படை ஆள் என்பது தெரியவந்தது.

விபத்து மரணம் என்று பதில் நீதிவான் திரு இரா. சந்திரபாலன் தீர்ப்பளித்தார். (இ-எ-150)

# 6 ஆம் ஆண்டு ஆங்கில ஆசிரியருக்கு பயிற்சி வகுப்பு

புங்குடுதீவு, ஜன. 26

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஆறும் ஆண்டில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு யாழ்-கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்திருக்கிறது

அடுத்த மாதம் 5 ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை இவ் வகுப்புகள் நடைபெறும்.

புங்குடுதீவு - வேலணை கல்வி வட்டாரங்களைச் சேர்ந்தோருக்கு யாழ்-இந்துக்கல்லூரியிலும்,

மானிப்பாய் - வட்டுக்கோட்டை வட்டாரங்களைச் சேர்ந்தோருக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும்,

பருத்தித்துறை - உடுப்பிட்டி வட்டாரங்களைச் சேர்ந்தோருக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும்,

காங்கேசன்துறை வட்டாரத்தைச் சேர்ந்தோருக்கு தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் இப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படும். (இ-131)

## ஐக்கிய நாணய சங்கங்கள் வறிய மக்களுக்கு உதவ வேண்டும்

கரவெட்டி, ஜன. 26

இந்த ஆண்டை சர்வதேச வீடமைப்பு ஆண்டாகப் பிரகடனப்படுத்தியிருப்பதனால் வீடுகளை அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள ஐக்கிய நாணயச் சங்கங்கள் வறிய மக்களுக்கு வீடுகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்,

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு இ. ஐயாத்துரை இவ்வாறு கூறினார்.

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் சர்வதேச வீடமைப்பு ஆண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட விழாவுக்குத் தலைமைவகித்து அவர் உரையாற்றினார்.

தேசிய வீடமைப்புச் சபையினால் வழங்கப்படும் உதவியுடன் மட்டும் நின்றுவிடாது வேறும் தனியார் நிறுவனங்களுடன் ஐக்கிய நாணயச் சங்கங்கள் தொடர்பு கொண்டு நிதியுதவியைப்பெற்று வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஐக்கிய நாணயச் சங்கத்தினரும், வீடமைப்பு உத்தியோகத்தர், விசேட சேவை உத்தியோகத்தர் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர். (இ-70)

### சயரோக கருத்தரங்கு

கன்னாகம், ஜன. 26

மாவிட்டபுரம் லயன்ஸ் கழகமும், வடபிராந்திய சயரோகத் தடுப்புச் சங்கமும் இணைந்து நடத்தும் சயரோகம் சம்பந்தமான கருத்தரங்கு பெப்ரவரி 21-ஆம் திகதி நடைபெறுகிறது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கிற்கு வைத்திய கலாநிதி சி. இந்திரராஜா தலைமை வகிப்பார்.

சயரோகம் பற்றிய உண்மையான தகவல்களை மக்கள் மத்தியில் பரப்ப இதுபோன்ற கருத்தரங்குகள் அவசியமாகின்றன என வடபிராந்திய சயரோக தடுப்பதிகாரி திரு ஆ. பேரானந்தநாயகம் உதயனிடம் தெரிவித்தார். (இ-27)

### விளையாட்டு போட்டியும் சீட்டிழுப்பும்

கரவெட்டி, ஜன 26

உடுப்பிட்டி இமையாணன் கண்ணகி சனசமூக நிலையத்தினால் அண்மையில் சிறுவர் விளையாட்டுப் போட்டியும் அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பும் நடத்தப்பட்டன. (இ-70)

### இ போ ச பஸ்கள்

## இரவில் குறிப்பிட்ட இடங்களில் தங்கி நின்று காலையில் சேவை ஆரம்பம்

அச்சுவேலி ஜன 26

வட பிராந்தியபோக்குவரத்துச் சபை, பிரயாணிகளின் வசதி கருதி விசேட பஸ் போக்குவரத்துஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது

இதன் படி அச்சுவேலி, சித்தன்கேணி, காங்கேசன்துறை, பனை, கொடிகாமம். ஆகிய இடங்களில் கோண்டாவில் டிப்போ பஸ்கள் இரவு வேளையில் தங்கி நின்று காலையில் யாழ்ப்பாணம் நோக்கி செல்ல ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 4 45 மணிக்கு யாழ் பஸ் நிலையத்திலிருந்து அச்சுவேலிக்கு 750 ஆம் இலக்க பாதையில் வரும் பஸ் இரவு அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் தங்கி நின்று காலை 7.25 மணிக்கு அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும்.

இதே போன்று கொடிகாமம் 764 இலக்கப் பாதையில் பனை பாதையில் சிதம்பரக் கேணிப்

(4ம்- பக்கம் பார்க்க)

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# யாழ்ப்பாணத்துக்கு எரிபொருள் இந்தியாவில் இருந்து அனுப்புக

### பத்திரிகைக்குக் கடிதம்

சென்னை ஜன 25

இலங்கை அரசு வட பகுதி மீது விதிக்கப்பட்ட எரிபொருள் தடையில் இருந்து தமிழரைக் காப்பாற்ற உணவும் எரிபொருளும்பாக்கு நீரிணையூடாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

எம்மிடம் வழி உண்டு; எம்மிடம் உறுதி உண்டு பின்னர் ஏன் புதுடில்லி காத்துக் கொண்டிருக்கிறது?

கோயம்புத்தூரைச் சேர்ந்த திரு ஏ. ஆனந்தேஸ்வரன் 'இந்து' விற்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் முன்கண்டவாறு கோரியிருக்கின்றார்.

'இந்து' வில் இக்கடிதம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது;-

கியூபாவில் இருந்து சோவியத் ஏவாயுதங்களை கென்னடி அகற்ற வைத்தார்

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க சி. ஐ ஏயின் ஊடுருவலை ரஷ்யா முறியடித்தது.

1971 இல் கிழக்குப் பாகிஸ்தானில் எமது நலன்களை நாம் பாதுகாக்க முடிந்தது.

ஆகவே எமது நாட்டுக்கு எதிரான சதிச் செயல்களில் திருகோணமலை பாவிக்கப்படுவதை நாம்பொறுத்துக்கொண்டிருக்கவேண்டுமா? அப்படிக் கூறுவதற்கு காரணம் எதுவும் இல்லை

தமிழரை அடக்கு முறைக்கு அடிமைப்படுத்த கொழும்பு அரசு கங்கணம் கட்டி நிற்கிறது.

கொழும்பு அரசின் மகிழ்ச்சி சவாரிக்கு இனியும் இடங்கொடுக்கக் கூடாது. அது மட்டுமல்ல ஈழம் வாசிகளைக் காப்பாற்ற இந்தியா விரைய வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினையில் மனித உரிமை, அரசியல் நாகரிகம் மட்டும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை; அணிசேரா நாடு என்ற முறையில் இந்தியாவின் பாதுகாப்பும் தங்கியுள்ளது-

இப்படி அந்த வாசகர் தனது கடிதத்தில் எழுதியிருக்கிறார். (இ-எ)

## அகதிகளுக்கான கோதுமை மாவை வெளியாருக்கு விற்றனராம் கந்தளாயில் நால்வர் கைது

திருகோணமலை, ஜன. 26

கந்தளாய் அகதிகளுக்கான கோதுமை மாவை வெளியாருக்கு விற்றதாகக் கூறப்படும் நான்கு பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

திருகோணமலை நீதிவான் நான்கு பேரையும் விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

திருமலை பிரிமா மா ஆலையில் இருந்து 104 மா மூடைகள் லொறியில் கந்தளாய் அகதிகளுக்கு வழங்கப்படுவதற்காக ஏற்றிச் செல்லப்பட்டன

அகதிகளுக்கு வழங்குவதற்குப் பதில் இரண்டு வர்த்தகர்களுக்குமாவை விற்றனர் என்ற சந்தேகத்திலேயே நான்கு பேரும் கைது செய்யப்பட்டனர். (இ-எ-150)

### சர்வதேச லயன்ஸ் யாழ் வருகை

யாழ்ப்பாணம். ஜன. 26

சர்வதேச லயன்ஸ் கழக பிரமுகர்கள் யாழ்ப்பாண விஜயம் ஒன்றை மேற்கொள்ள உள்ளனர்.

இதற்கான ஒழுங்குகளை யாழ் மாவட்ட லயன்ஸ் கழகம் செய்து வருவதாகக் கழகப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (இ-5)



ஆண்களின் தேவைகளை நிறைவேற்றுகிறது

ரிஷி அஜமாமிச லேகியம்

"முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது"

அதன் பயன்கள்

இல்வாழ்க்கையில் சிறந்த இன்பம் பெறவும் இழந்த சக்தியை மீட்டுக் கொடுப்பதுடன், எல்லா நரம்புகளையும் முறுக்கேற்றி வீரியவிருத்தியை கொடுக்க வல்லது தளர்ச்சி, சோர்வு, களைப்பு, சிறுபிராயத்தில் அறியாமல் செய்த கெட்ட செய்கையாலும், வாலிப பருவத்தில் மிதமீறிய தாம்பத்தியத்தாலும், வயதான காலத்தில் உடல் சக்தியையும், ஆண்தன்மையையும், இரத்தம் குறைந்து மனச்சோர்வடைந்துஇருப்பவர்களையும் ரிஷி அஜமாமிச லேகியம் சாப்பிடுவதினால் புது சக்தியைப் பெற்று.

இல்லற வாழ்க்கையில் சந்தோஷமாக இருப்பதற்கு சிறந்த காயகல்ப மருந்து, சக்தியையும் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தருகிறது.

250 கிராம்: ரூ. 60/- 500 கிராம்; ரூ. 110/-

தபால் செலவு ரூபா 10/-

Dr.T.D.மதுரநாயகம், D. A. M. (Cey.) M. Ac F (Cey)

ஞானசுந்தர வைத்தியசாலை

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

## கடமையைச் சரியாகச் செய்யமுடியாத நிலையில் மிருக வைத்திய அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஜன 26

இன்றைய நாட்டு நிலைமை காரணமாக மிருக வைத்திய அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்ய முடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ் கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் இத்தகவலை சிறப்பு விருந்தினராகப் பங்கு பற்றிய திருமதி சுமணா தனபாலசிங்கம் தெரிவித்தார்.

இன்னொரு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட திரு இ சு. நவரத்தினம் தனது பேச்சில் கால்நடை [illegible] பற்றி விளக்கமளித்தார். (இ-எ)

### செயற்கைக் கால் பொருத்தும் நிலைய நிதி

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ் நகரில் செயற்கைக் கால் பொருத்தும் நிலைய நிதி திரட்டும் பணிக்கு உதவும்படி யாழ் மருத்துவ பீட மாணவர் ஒன்றியம் பொது மக்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது

நிதி திரட்டும் கலை நிகழ்ச்சி ஒன்றை எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை மாலை யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடத்த உள்ளனர். (இ-எ)

# கைதான 9 தமிழரும் எங்கே? அரசபடையினர் கைவிரிப்பு

திருகோணமலை, ஜன 26

டிசம்பர் மாதத்தில் கைது செய்யப்பட்டு தோப்பூர், மூதூர் ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒன்பது தமிழர்களும் "காணாமற்போனவர்கள் பட்டியலில்" சேர்ந்து விட்டார்களா? என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒன்பது தமிழரின் நிலை என்ன என்பது பற்றி அறிவிக்கும்படி மூதூர் பிரசைகள் குழு திருகோணமலை மாவட்ட இராணுவ இணைப்பதிகாரியைக் கேட்டுள்ளது.

இந்த ஒன்பது பேரும் தோப்பூர், மூதூர் முகாம்களில் வைக்கப்பட்டிருந்தனர்.

உறவினர்கள் இம் மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் இம் முகாம்களுக்குச்சென்று ஒன்பது பேரையும் பார்த்து வந்தனர்.

இம்மாதம் மூன்றும் திகதி சென்ற போது ஒன்பது பேரும் காணப்படவில்லை.

விசாரித்தபோது அவர்கள் பற்றி தங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று முகாம் அதிகாரிகள் கையை விரித்து விட்டனர்.

இப்படி மூதூர்ப் பிரசைகள் குழு, இராணுவ இணைப்பதிகாரியிடம் தெரிவித்துள்ளது.

காணாமற் போனவர்கள் என்று அஞ்சப்படும் 9 பேரின் விவரங்கள் வருமாறு:

1. சிவசேகரம் கிருஷ்ணராசா
2. இராசரத்தினம் குணரத்தினம்
3. சீதபொன்கலன் பாய்வா
4. தோமஸ் செபஸ்தி யாம்பிள்ளை
5. எஸ் பீதாம்பரம்
6. முத்தான்குட்டி சங்கரப்பிள்ளை
7. ஜீவரத்தினம் மார்க்கண்டு
8. சரவணமுத்து சச்சிதானந்தம்
9. கோணமலை தட்சணமூர்த்தி

(இ-எ-150)

### விவசாயியின் சடலம்

திருகோணமலை, ஜன 26

வயலுக்கு நீர்பாய்ச்சுவதற்குச் சென்ற தமிழ் விவசாயி ஒருவர் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சடலமாக வீதியில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டார்.

மூதூரில் பள்ளிக்குடியிருப்புக் கிராமத்தில் இச்சம்பவம் நடந்தது.

மூதூர் பதில் நீதிவான் [illegible] என்று தீர்ப்பளித்தார். (இ-எ-150)

## அந்த அழகிய பெண் யார்?

கொழும்பு ஜன 26

பதுளை பஸ் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக அழகிய இளம் பெண் ஒருத்தியைத் தேடிப்பிடிக்கும்படி, சகல பொலீஸ் நிலையங்களுக்கும் பணிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண் சம்பவம் நடந்த தினம் அன்று மாலை பஸ்நிலையத்தில் நின்று பஸ் புறப்படும் நேரம் பற்றி விசாரித்துக் கொண்டு இருந்தார் என்று பதுளை பொலீஸ் அதிபர் தெரிவித்தார்.

இதனிடையில் கால் இழந்த நிலையில் பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒருவரின் அடையாளத்தைக் கண்டுபிடிப்பதில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர். அந்த நபர் மயக்கத்தில் இருக்கின்றார். (இ-எ)

### தீவுப் பகுயில் சென் ஜோன்ஸ் ஆண்டுவிழா

வேலணை, ஜன. 26

தீவுப்பகுதியில் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு ஆரம்பமாகி ஒருவருட பூர்த்தியை முன்விட்டு ஆண்டு விழா நடைபெற இருக்கின்றது.

ஆண்டு விழாவையொட்டி தீவுப்பகுதியில் உள்ள பாடசாலைகளின் மாணவர்களிடையே முதலுதவி, சுகாதார அறிவு சம்பந்தமான போட்டி ஒன்று நடைபெறும்.

இப்போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டுபவர்களுக்கு தங்கப் பதக்கமும் வேறு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்பட இருக்கின்றன. (இ-167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

உங்களால் சாதிக்க முடியும் என நீங்கள் நினைத்தால் நிச்சயம் உங்களால் முடியும்.

- வெர்ஜில்

உதயன்
உண்மை - விழிப்புணர்வு - சுதந்திரம்
இல, 15, ஆஸ்பத்திரி ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 26-1-1987 த.பெ. 23

## வர்த்தகர் - பொதுமக்கள் நல்லுறவின் அவசியம்

ஊர்காவற்றுறைத் தொகுதியில் புளியங்கூடலில் வர்த்தகர்- பொதுமக்கள் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றிருக்கிறது.

பொருள்களை விற்பதிலும், வாங்குவதிலும் வர்த்தகர்களுக்கும், பொதுமக்களுக்கும் உள்ள கஷ்டங்களை ஆராய்ந்து அறிந்து அவற்றை நீக்குவதே கருத்தரங்கின் நோக்கமாக இருந்திருக்கிறது.

அந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்தவர்களைப் பாராட்டுகிறோம். அது ஒரு நல்ல முன்மாதிரி. எமது பிரதேசத்தில் ஏற்பட்டு வரும் நெருக்கடி நிலையில் இது போன்ற கருத்தரங்குகள் தமிழ்ப் பகுதிகளில் நகரங்கள், கிராமங்கள் எங்கிலும் நடத்தப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வழங்க அரசாங்கம் மறுத்து வருகிறது. தமிழ் மண்ணை பெரும் போர்ப் பிரதேசமாக்குவதற்கு அது முயன்று வருகிறது. அரசியல், இராணுவ அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.

அவை போதாது எனக் கருதி தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடைகளைக் கட்டம் கட்டமாக விதித்து வருகிறது. உணவுப் பொருள்கள், மற்றும் பாவனைப் பொருள்களை தமிழ்ப் பிரதேசங்களுக்குக் கொண்டு வந்து சேர்ப்பதையும் பல அநியாய விதிமுறைகளைப் புகுத்தி மறைமுகமாகத் தடுத்து வருகிறது.

எனவே முன்னர் எப்போதும் இருந்ததை விடவும் வர்த்தகர்கள், மிகவும் பொறுப்பு உணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டிய காலகட்டம் இது.

தாம் இந்தச் சமுதாயத்தின் அங்கம் என்பதை அவர்கள் உணர்ந்து நடக்க வேண்டும். உணவு, மற்றும் பாவனைப் பொருள்களைக் கொண்டு வந்து சேர்ப்பதில் வர்த்தகர்கள், பல தொல்லைகளையும், கஷ்டங்களையும் அனுபவிக்க நேரிடும் என்பதை எல்லோரும் அறிவர். அதற்காக அளவுக்கு அதிகமான இலாபத்தை வைத்து வியாபாரம் செய்து பொருள் ஈட்ட வேண்டும் என்று அவர்கள் ஆசைப்படுதல் ஆகாது. பொருள்களைப் பதுக்கி விலை உயர்வுகளை உண்டாக்கக் கூடாது.

முன் குறிப்பிட்ட கருத்தரங்கில், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. ஜெ. சந்திரகாந்தன் இந்தக் கருத்தை மிகப் பொருத்தமாக வலியுறுத்தி இருக்கிறார்.

வர்த்தகன் ஒரு சமூகத்தின் முதுகெலும்பானவன். இப்போதைய நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி வர்த்தகர்கள் பொதுமக்களை ஏமாற்ற நினைக்கக் கூடாது. இலாபத்தை மட்டும் நோக்காகக் கொண்டு வியாபாரம் செய்யக் கூடாது. பொதுமக்களுக்குச் சேவை செய்வதாகக் கருதி வர்த்தகத்தை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இந்த மனப்போக்கு, மனப் பக்குவம் இன்றைய சூழ்நிலையில் தமிழ்ப் பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு வர்த்தகனுக்கும், வியாபாரிக்கும் தானாக வரவேண்டும்.

மக்கள் கஷ்டப்படும் வேளையில் அவர்கள் மீது மேலும் சுமைகளையும், கஷ்டங்களையும் அதாவது விலை உயர்வு, தட்டுப்பாடு, பதுக்கல் ஆகியவற்றை ஏற்றுவது பெரும் சமூக விரோதக் குற்றமாகும்.

இதனை உணர்ந்து தமிழ் வர்த்தகர்கள் தமது தொழிலை சரிவரச் செய்வார்கள் என நம்புவோமாக.

காவலூர் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் வெறும் பேச்சளவில், பத்திரிகையில் வந்ததோடு நின்றுவிடாமல் செயலளவில் நடைமுறைக்கு வரும் என்று நம்புகிறோம்.

வர்த்தகர்கள் மட்டுமன்றி பொது மக்களும் பொறுப்பு உணர்ச்சியுடன் நடந்து கொள்வது அவசியம். அவர்கள் வர்த்தகர்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கக் கூடாது. வர்த்தகர்கள் செய்வது தொழில், அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் தான் அவனது குடும்பம் வாழ்கிறது என்பதைப் பொதுமக்கள் உணர வேண்டும். வர்த்தகன் நியாயமான இலாபத்தை வைத்துத் தொழில் செய்யும்போது அவனைக் கண்டிக்கக் கூடாது.

மொத்தத்தில் இன்றைய காலகட்டத்தில் வர்த்தகர்- பாவனையாளர் (பொதுமக்கள்) நல்லுறவு மிகவும் அவசியமாகும். இடத்துக்கு இடம் வர்த்தகர் - பொதுமக்கள் கருத்தரங்குகள், சந்திப்புகளை அடிக்கடி நடத்துவதால் அந்த நல்லுறவை உருவாக்குவதோடு வளர்க்கவும் முடியும்.

# 4 பேராசிரியர்கள் லெபனானில் கடத்தல்

## எதிரிகளுக்கு ஆயுதம் விற்றதாக இனம் தெரியாதவர்கள் தகவல்

பெய்ரூட், ஜன.25

லெபனான் பல்கலைக் கழகத்தில் வைத்து ஆயுதம் தாங்கிய சிலர் மூன்று அமெரிக்க பேராசிரியர்களையும் அமெரிக்க கடவுச் சீட்டு வைத்திருந்த ஓர் இந்திய பேராசிரியரையும் கடத்திச்சென்றுள்ளனர்.

இவர்கள் பொலிஸார் போல் வேடமணிந்து பல்கலைக்கழகத்திற்குள் புகுந்து அமெரிக்க பேராசிரியர்களான அலன் ஸ்டீவ், றொபேர்ட், ஜோன் தெரன்ஸ் ஆகியோரையும் டாக்டர் சிங்கையும் கடத்தினர்.

இந்தப் பேராசிரியர்கள் நால்வரும் அமெரிக்காவில் இருந்து ஆயுதங்கள் தருவித்து அவற்றை எதிரிகளுக்கு விற்பதாலேயே இந்த நடவடிக்கை என அவர்களைக் கடத்திச் சென்றவர்கள் துண்டுப் பிரசுரம் ஒன்றை விட்டு சென்றுள்ளனர்.

இவர்களை மீட்கும் பணியில் அமெரிக்க மத்திய உளவு ஸ்தாபனத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் லெபனான் விரைவதாக வாஷிங்டன் செய்தி வெளியிட்டது.

அமெரிக்க ஜனாதிபதி றேகனும் இவர்களது விடுதலை சம்பந்தமாக ஆர்வம் காட்டி வருகின்றார். (ஒ)

### வெளி உலகில்

ஆர்ப்பாட்டக்காரர் 16 பேர் படுகொலை:

## விசாரணை நடத்த தனியான ஆணைக்குழு!

### அக்கினோ நியமித்தார்

மணிலா, ஜன. 25

பிலிப்பீன்ஸில் ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது 16 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி திருமதி கொரஸின் அக்கினோ இந்த ஆணைக்குழுவை நியமித்திருக்கிறார்.

கடந்த வெள்ளியன்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தின் போது இராணுவத்தினர் நடந்து கொண்ட விதம் குறித்து பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-ஒ)

### சீனு அறிவிப்பு

பீகிங், ஜன 25

சீனாவில் கல்விமான்களின் சுதந்திரம் பாதிக்கப்படமாட்டாது என அரசாங்கம் உறுதி அளித்துள்ளது.

ஜனநாயக சுதந்திரம் கூடுதலாக வழங்கப்பட வேண்டும் என்ற மாணவர் இயக்கத்திற்கு ஆதரவளித்த பல கல்விமான்கள் தமது பதவிகளை ராஜினாமா செய்வதைத் தடுப்பதற்காகவே இந்த அறிவிப்பு என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (உ-ஒ)

## மன்னர் ஹுசைன் பதவி விலகும்வரை யுத்த நிறுத்தமில்லை

### ஈரான் அறிவிப்பு

குவைத், ஜன. 25

ஈராக் மன்னர் சதாம் ஹுசெய்ன் பதவி விலகும் வரை ஈராக்குடன் யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்கு இடமேயில்லை.

இப்படி ஈரான் அறிவித்திருக்கிறது.

குவைத்தில் நடைபெறவிருக்கும் அரபு உச்சி மாநாட்டில் சமர்ப்பிப்பதற்கென ஈராக் விடுத்திருக்கும் யுத்த நிறுத்த யோசனையையும் ஈரான் நிராகரித்திருக்கிறது. (ஒ)

## பத்திரிகையாளர் மாநாட்டில் உயர் அதிகாரி தற்கொலை!

ஹரிஸ்பேர்க், ஜன. 25

ஊழல் குற்றச்சாட்டுக்கு இலக்கான அமெரிக்க அரசு உயர் அதிகாரி ஒருவர் பத்திரிகையாளர் மாநாட்டில், பத்திரிகையாளர்கள் பார்த்து இருக்கத் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

ஆர் பட்டுவர் என்ற அதிகாரி 3லட்சம் அமெரிக்க டாலர் லஞ்சக் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

தண்டனை விதிப்பது இன்னொரு தினத்துக்கு ஒத்திப் போடப்பட்டது.

இதனிடையில் அவர் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். மாநாட்டில் வைத்து தன் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களை எல்லாம் அவர் நிராகரித்தார்.

பின்னர் துப்பாக்கியை எடுத்து தனது வாய்க்குள் வைத்து விசையைத் தட்டி விட்டார்.

அதற்கு முன்னர் பத்திரிகையாளரிடம் 'ஒதுங்கிப் போங்கள் இல்லாவிடில் நீங்களும் காயமடைவீர்கள்'— என்று அவர் எச்சரித்தார்.

பத்திரிகையாளர் முன்னே விழுந்து உயிரிழந்தார். (ஒ-எ)

## எல்லை பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை

இஸ்லாமபாத், ஜன. 25

இந்தியா- பாகிஸ்தான் எல்லைப்பகுதி நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு உடனடியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என பாகிஸ்தான் யோசனை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுடனான பஞ்சாப் மாநிலத்தின் எல்லைப் பகுதிக்கு இந்தியா தனது துருப்புக்களை அனுப்பியுள்ளதோடு விமானப்படையையும் தயார் நிலையில் வைத்திருக்கிறது.

இது தொடர்பாகவே பாகிஸ்தான் இப்படி யோசனையை வெளியிட்டிருக்கிறது. (உ-ஒ)

### செய்திக்கொத்து

### ஒட்டுசுட்டான் மாணவர் திறமை

யாழ்ப்பாணம், ஜன. 26

அண்மையில் பரீட்சை ஆணையாளரால் வெளியிடப்பட்ட ஜி. சி. ஈ. (உயர்தரம்) தேர்வின் புள்ளிகள் அடிப்படையில் கலைப்பிரிவில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மாணவி செல்வி மு. ஜானகி 264 புள்ளிகளைப்பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

பரீட்சைக்குத் தோற்றிய பன்னிரண்டு மாணவரும் பல்கலைக் கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இம் மாணவர்களைப் பாராட்டி தனித்தனிக் கடிதங்களை அதிபர் திரு. தா. சிவசம்பு அனுப்பி வைத்துள்ளார். (இ)

### ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 26

கொழும்புத்துறையின் மணிப்புரி, உதயபுரம், வசந்தபுரம் ஆகிய கிராமங்களின் முன்னேற்றம் குறித்து ஓர் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது:

இந்த ஆலோசனைக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை மணிப்புரி சமாதான சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்துக்குப் பகுதி விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் திரு மலரவன் தலைமை வகித்தார்.

கிராம முன்னேற்றச் சங்கம், சமாதானசபை சனசமூக நிலையங்கள், மாதர் முன்னேற்றச் சங்கம், கிராம நீதிமன்றம் ஆகியவற்றின் உறுப்பினர்களும் பொது மக்களும் தங்கள் ஆலோசனைகளைத் தெரிவித்தனர். (இ)

### செங்குந்த இந்துக்கல்லூரி புதிய அதிபர்

யாழ்ப்பாணம், ஜன. 26

திருநெல்வேலி கிழக்கு செங்குந்த இந்துக் கல்லூரிக்குப் புதிய அதிபராக திரு வி. அரியநாயகம் 12-1-1987 தொடக்கம் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கலைப்பட்டதாரியும் கல்வி டிப்ளோமாத் தகுதியும் பெற்ற இவர், பல ஆண்டுகளாக உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி வந்தார்.

நிரந்தர அதிபர் ஒருவரை நியமிக்கும்படி செங்குந்த இந்துக்கல்லூரி அபிவிருத்திச் சங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்து வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் இந் நியமனத்தை செய்திருக்கிறார். (இ-எ)

### கலை நிகழ்ச்சி

சுன்னாகம், ஜன. 26

அளவெட்டி அருணோதய கல்லூரியில் நடைபெற்றுவரும் மாதாந்த கலை நிகழ்ச்சியான 'அரங்கிசை அலங்கரிப்பவர்கள்' பெப்ரவரி 7 ஆம் திகதி நிகழ்ச்சியில் சங்கீத பூஷணம் எஸ். குமாரசாமி பாடுகிறார்.

இக் கச்சேரிக்கு வயலின் வித்துவான் பிரம்மஸ்ரீ எஸ். வெங்கடேஸ்வர சர்மாவின் வயலினும், மிருதங்க வித்துவான் பிரம்மஸ்ரீ எஸ். பாலச்சந்திரசர்மாவின் மிருதங்கமும் சிறப்பாக ஒலிக்கவுள்ளன. (இ-27)

### வேலை நிறுத்தம் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன.26

இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் ஜனவரி 16 ஆம் திகதி நடத்தவிருந்த பொது வேலை நிறுத்தம் மார்ச் 5 ஆம் திகதிக்கு ஒத்திப் போடப்பட்டது.

நாட்டில் நிலவும் அநீதிக்கும் அடக்குமுறைக்கும் எதிராக மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படையாக தெரிவிக்கவே இந்த பொது வேலை நிறுத்தம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது (இ-எ)

### தராசு படிகளுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஜன 26

தராசு படிகளுக்கு முத்திரையிடல் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இம்மாதம் 27 ஆம் திகதி முதல் அடுத்த 16 ஆம் திகதி வரை இடம்பெறும். இம்மாதம் 27 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை [illegible] உப அபிவிருத்திச்சபை [illegible] அடுத்த மாதம் 2ஆம் திகதி முதல் 16 ஆம் திகதிவரை தெல்லிப்பளை உதவி அரச அதிபர் அலுவலகத்திலும் தராசுபடிகளுக்கு முத்திரையிடப்படும். (இ-எ)

### புத்தக விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன. 26

வேலணை கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கான இலவச பாடப் புத்தகம் சேர் வைத்திலிங்கம்துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் வைத்து விநியோகிக்கப்படுகிறது.

இதுவரை பாடப் புத்தகங்களை பெற்றுக் கொள்ளத் தவறிய அதிபர்கள் உடனடியாக பெற்றுக்கொள்ளுமாறு வேலணை வட்டாரக் கல்வியதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

போக்குவரத்துக் கஷ்டமான இவ் வேளையில் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மாணவர்களின் கல்வி விடயத்திலும் முன்னின்று புத்தகங்களை ஏற்றி இறக்கி உதவி செய்துள்ளது.

இதற்காக மேற்படி கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளுக்கு வேலணை வட்டாரக் கல்வியதிகாரி பொன் கணேசன் நன்றி தெரிவித்திருக்கிறார். (உ-10)

### மற்றொரு அரசியல் கட்சி உதயம்

யாழ்ப்பாணம், ஜன. 26

இலங்கை லிபரல் கட்சியின் கொள்கைகள் பற்றி விளக்கமளிக்க பெப்ரவரி மாதத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடத்தப்படும்.

கட்சியின் முதலாவது வருடாந்த மாநாடு ஏப்ரலில் இடம் பெறும்.

இத்தகவல்களை இலங்கை லிபரல் கட்சித் தலைவர் டாக்டர் சானக அமரதுங்க தெரிவித்தார். (உ-எ)

### இடமாற்றம்

புங்குடுதீவு, ஜன 26

புங்குடுதீவு தபால் நிலையத்தில் உதவி தபாலதிபராகப்பணியாற்றிய திரு. எஸ். தங்கராசா இம்மாதம் முதல் கொழும்பு [illegible] இடமாற்றம் பெற்றுள்ளார். (இ-131)

### இந்துவில் முதலுதவி வகுப்பு

வேலணை, ஜன.26

யாழ்- இந்துக் கல்லூரியில் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் புதிய முதலுதவிப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட இருக்கின்றன.

இதற்கான ஏற்பாடுகளை யாழ் இந்துக் கல்லூரி பிரிவு அத்தியட்சகர் திரு: தி. கமலநாதன் செய்து வருகின்றார்.

இம்முதலுதவிப் பயிற்சிக்கான வகுப்புக்களின் விரிவுரைகளை தீவுப்பகுதி சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவு பொறுப்பாளர் திரு. சி. இளங்கோ நடத்துவார். (உ-167)



### பொய்யாமொழி

குறள்:

அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும்.

பொருள்:

ஒருவன் ஆசையை முழுவதும் ஒழித்தால், அவன் கெடாமல் வாழ்வதற்கு உரிய நல்ல செயல் அவன் விரும்புமாறு வாய்க்கும்

# போதைப் பொருளுக்கு 3 ஆயிரம் பேர் அடிமை

## புலிகள் அறிக்கையில் திடுக்கிடும் தகவல்

யாழ்ப்பாணம். ஜன,26

சமீபத்தில் எடுத்த புள்ளி விபரங்களின்படி எமது பிரதேசத்தில் மாணவ, மாணவியர் உட்பட சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் போதைவஸ்து பாவனையால் பாதிக்கப் பட்டிருக்கின்றனர்.

இதனை ஒவ்வொரு பெற்றோரும் நன்கு கவனத்தில் எடுத்து நடக்க வேண்டும்.

—இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இன்று உலகமக்களின் பயங்கர எதிரியாகவும் உயிர்க் கொல்லியாகவும் போதை வஸ்து விளங்குகிறது.

நெருக்கடி மிக்க இன்றைய சூழ்நிலையில் ஒரு கொடிய எதிரியிடம் இருந்து நாம் எம்மக்களை காக்க அரும்பாடுபட்டு வரும் இவ்வேளையில் எம்மை நாமே அழிக்கும் விதமாக போதைவஸ்து பாவனை தமிழீழமெங்கும் பெருகி வருகிறது.

எம் மக்களை ஆரோக்கியமற்றவர்களாக்கி படிப்படியாக அழிக்கும் நோக்குடனும் கூர்மையடைந்துவரும் இப் போராட்டத்தை நசுக்கும் முகமாகவும் போதை வஸ்துக்களை தமிழீழப் பிராந்தியத்தில் சில ஏகாதிபத்திய சக்திகள் விநியோகித்து வருகிறார்கள்.

போதை வஸ்து பாவனையால் பாதிக்கப் பட்டோர் உடன் வைத்தியரை நாடித் தகுந்த சிகிச்சை பெறுவதின் மரணத்தை தவிர்க்க முடியாது.

நாம் ஏற்கனவே போதைவஸ்தை முற்றாக தவிர்க்கும்படி எச்சரித்திருக்கிறோம். இருந்த போதும் தொடர்ந்து போதைவஸ்து பாவனை பெருகிய வண்ணமே உள்ளது

போதை வஸ்து பாவனையாளர் ஒரு சிறு எண்ணிக்கையிலிருப்பினும் காலக்கிரமத்தில் அது பல்கிப் பெருகி முழு நாட்டையும் குட்டிச்சுவராக்கும் ஆபத்தை உணர்ந்தே சர்வதேச ரீதியில் போதை வஸ்து விற்பனைக்கு மிகக் கடுமையான தடை விதிக்கப் பட்டுள்ளது.

போதை வஸ்து விற்பனை செய்வோர், போதை வஸ்து ஏஜண்டுகள் ஆகியோரை முற்றாக கட்டுப்படுத்தி போதை வஸ்து விற்பனையை முற்றாக தவிர்க்க — இதை மீறுவோர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி நேரிடும் என இறுதியாக எச்சரிக்கின்றோம் — இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (- உ)

# கோப்பாயில் 6 கொத்தணிகள்

## அடுத்தமாதம் முதல் இயங்கும்

கோப்பாய் கல்வி வட்டாரத்தில் அடுத்த மாதம் முதல் ஆறு கொத்தணி அமைப்புக்களை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

வயாவிளான் கொத்தணி அதிபராக வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு என். கணேசபிள்ளையும் —

உரும்பராய் கொத்தணி அதிபராக உரும்பராய் இந்துக் கல்லூரி அதிபர் திரு எஸ். சிவபாலனும்—

நீர்வேலி கொத்தணி அதிபராக நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, அதிபர் திரு கே சிவசுப்பிரமணியமும்—

புத்தூர் கொத்தணி அதிபராக புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அதிபர் திரு எஸ் ஆர். சண்முகரத்தினமும்—

அச்சுவேலி கொத்தணி அதிபராக அச்சுவேலி மகாவித்தியாலய அதிபர் திரு. ஈ. டி. துரைசிங்கமும் நியமிக்கப்படுவர் எனத் தெரியவருகிறது.

கோப்பாய் கொத்தணி அமைப்பு ஏற்கனவே கடந்த வருடம் முதல் செயற்பட்டுவருகிறது.

### ஓய்வூதியம்

சிவானந்த குருகுலம் தனது அங்கத்தவர்களுக்கான சகாய நிதியம் ஒன்றை அமைத்திருப்பதுடன் குருகுல அங்கத்தவர்களான கோவில் குருக்கள், அர்ச்சகர், உதவியாளர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஒன்றையும் செயற்படுத்தவிருக்கின்றது. (இ-81)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TYPEWRITERS**
Tamil - English
Standard — Portable
For Sale
FUDO ENTERPRISES
39/17, Power House Road
3rd Lane, Jaffna

# உதயன்

26 - 01 - 1987 திங்கட்கிழமை

TYPEWRITERS - தட்டச்சு இயந்திரங்கள்
சிறந்த முறையில், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.
**Fudo Enterprises**
Branch:-
39/17, Power House Road, 3rd Lane, JAFFNA. | Jaffna Road, Manipay. (Near Bank of Ceylon, Bitsmans.

## வித்தாரம்

வாரும் தம்பி மூரளி எப்படி இருக்கிறீர்? முகம் எல்லாம் காய்ஞ்சு போச்சுது. உமக்கு மட்டுமில்லை பலபேருக்கு அப்பிடித்தான். அது உந்தப் பனிக்கு. சரியான மழை பெய்ததாய் இல்லை. ஆனால் பனி ஒழுங்காய்ப் பெய்யுது. அதுதான் ஆக்களில் ஒரு வித்தியாசமான தோற்றம்.

ஆனால் ரவுணுக்குள்ளை எவ்வளவு பனிக்குளிர் தெரியயில்லை எண்டு தான் சொல்லவேணும். ஏன் தெரியுமே?

கிராமப் பக்கங்களை விட இஞ்சை மரம் தடியள் குறைவு எண்டது ஒரு காரணம். மற்றது ரவுண் வீதியளில் உள்ள குப்பை கூளம் எல்லாத்தையும் இரவில் தான் ஆக்கள் எரிக்கினம். அதாலை அந்தப் புகைக்கும் வெக்கைக்கும் பனிக்குளிர் அவ்வளவாத் தெரியயில்லை.

இரவிலை குப்பையளை எரிக்கிறது நல்லது தான்.

ஆனால் பசாருக்குள்ளை சில கடைக்காரர் பகலிலையே குப்பையளைக் கொளுத்தி விடுகினம். சனசந்தடி கூடின நேரத்திலை அப்பிடிச் செய்யிறதாலை சனத்துக்கு எவ்வளவு கஷ்டம்; சுகாதாரக் கேடு எண்டது அவைக்கு விளங்கயில்லையோ அல்லது விளங்கியும் அப்பிடிச் செய்யினமோ தெரியயில்லை.

பசார் எண்டதும் இன்னொரு சங்கதி ஞாபகம் வருகுது. கடைசியாய் பாய்க்கடைப் பக்கம் ஷெல் விழுந்ததோடை மரக்கறிச் சந்தையும் அகதிகள் மாதிரி இடம் பெயர்ந்து விட்டுது.

இப்ப ஸ்ரான்லி றோட்டிலை வின்சர் தியேட்டருக்கு அருகிலை உள்ள பேவி தான் மரக்கறிச் சந்தையா மாறியிருக்குது! உவங்கள் விழுவாங்கள் தமிழ் ஆக்களை மட்டும் அகதிகளாகவும், இடம் பெயர்ந்தவர்களாகவும் மாற்றயில்லை. ரவுணுக்குள்ளை கந்தோருகள், சந்தையள் எல்லாத்தையும் எல்லே இடம் பெயர்க்கிறுன்கள்!

நேற்று ஒருக்கா ஊருக்குப் போக நேரம் கிடைச்சுது. தை மாதத்திலை இருக்கிற வழமையான பனி அங்கையும் இல்லை.

நல்ல மழை இல்லை. அதாலை விளைச்சல் சரி வராது எண்டு தான் நினைச்சன் வயல் பக்கம் போனபோது நிலைமை பரவாயில்லை எண்டு தோன்றிச்சுது முந்தி விதைத்தவைக்கு நல்ல விளைச்சல் ஆனால் பிந்தி வைவபாடு கஷ்டம்தான் முந்தி விதைச்சவைக்கும் இப்ப நல்ல பனிப் பெய்தால் விசேஷமாய் இருந்திருக்கும்

* * *

மானிப்பாய் றோட்டாலை வரயிக்கை பாத்தேனே; பலகைகளை! சித்தங்கேணியிலிருந்து ஆனைக்கோட்டை, கோம்பயன்மணல் கழிய பொயிற்கிலை எண்ணிப் பாத்தா நூறு ரியூட்டரிகள் மிதகரும்.

ஒழுங்கை முகப்புகள், வீடுகள் எண்டு வித்தியாசம் இல்லாமல் எல்லாத்திலும் ரியூட்டரி பெயர்ப் பலகையள் தான்!

பின்னேரம் ஐஞ்சு மணி நேரமெல்லே, றோட்டிலை பல இடங்களிலை படிக்கிற பெடியள் பெட்டையளின்ரை சைக்கிள்கள் தான் அதிகம். கொஞ்சம் வர்ணிச்சுச் சொல்லுறதெண்டால் சூரியன் மறையையுக்கை குருவிக் கூட்டங்கள் வானப் பரப்பை நிரப்பி ஒன்ருய்ப் பறப்பது போலை இருந்திது.

இதிலை இருந்து என்ன தெரியுதெண்டா பள்ளிப்படிப்பைவிட ரியூட்டரிப் படிப்புத்தான் இப்ப கூட. ரியூட்டரி எல்லாத்தையும் பள்ளிக்கூடமாய் மாத்திப்போட்டு பள்ளிக்கூடங்களை மூடிப்போட்டு அதுகளிலை கோழிப்பண்ணை, ஆட்டுப்பண்ணை, கைத்தொழில் நிலையங்கள் நடத்தினுல் எங்கடை பொருளாதாரத்தையும் பெருக்கலாமே எண்டு எனக்குள்ளை ஒரு யோசினை பிறந்திது ஆனால் உடனேயே அதை வாபஸ் வாங்கிவிட்டேன். ஏன் தெரியுமோ? ... பள்ளிக்கூடங்களிலை படிப்பிக்கிற வாத்திமார் எல்லாரும் பிறகு என்னைத்தான் திட்டுவினம் எண்டு திரும்ப நினைச்சுப் பாத்திட்டேன்.

பாத்தியே பாத்தியே எங்கடை இரண்டு உழைப்பிலை ஒரு உழைப்புக்கு மண்போடுறதுக்கு இந்த ஆள் யோசனை சொல்லிக்குடுக்குதே எண்டு திட்டுவினம் எண்டு நினைச்சதும் முந்தின யோசனையை, இல்லை இல்லைக் கற்பனையைக் கைவிட்டு விட்டேன். காரிகையைக் காரிருளில் கைவிட்ட காதலன் போல ... எண்டு நினையேன்...!

— கொண்டோடி

## வன்செயல் பாதிப்பு நஷ்டஈடு வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன 26

1983 முதல் வன்செயல்களால் பாதிக்கப்பட்டு தொழில் இழந்துள்ள சகல தமிழ் அரச, திணைக்கள, தனியார் ஊழியர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

வன்செயலால் பாதிக்கப்பட்ட ஊழியர் சங்க பேராளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது

யாழ்ப்பாணம் ஜும்மாப் பள்ளிவாசல் வீதியிலுள்ள மலாயன் சங்கக் கட்டடத்தில் கூட்டம் நடைபெற்றது.

யாழ் அரச அதிபர் திரு வை. மு. பஞ்சலிங்கம், யாழ் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் ஆகியோரும் கூட்டத்தில் சமுகமளித்திருந்தனர்.

குடாநாட்டில் விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை அரசு நீக்கவேண்டும்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூக சேவைத் திணைக்களம் மூலம் அரசு நிதி உதவி செய்ய வேண்டும் எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (இ-5)

### இரவில்---

(2ம்-பக்கத் தொடர்ச்சி)

பாதையில் காங்கேசன்துறைப்பாதையில் செல்லும் பஸ்களும் இரவு குறிப்பிட்ட இடங்களில் தங்கி நின்று காலையில் யாழ்ப்பாணத்தை வந்தடைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

எரிபொருள் தட்டுப்பாடு, பிரயாணிகளின் வசதி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது (இ-11)

# முல்லைத்தீவில் 15,000 அகதிகள்

முள்ளியவளை, ஜன. 26

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 15 ஆயிரம் அகதிகள் தற்சமயம் இருக்கின்றனர். 14 முகாம்களில் இவர்கள் தங்கியுள்ளனர். தனியார் வீடுகளிலும் அகதிகள் தங்கியுள்ளனர்.

அகதிகள் மத்தியில் பட்டினிச் சாவு ஏற்படாமல் இருக்க பொதுமக்களின் உதவியை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றோம்.

முல்லைத்தீவு மாவட்டப் பிரஜைகள் குழுத் தலைவர் திரு பொ. சந்திரசேகரி முள்ளியவளை உதயன் செய்தியாளரிடம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

அகதிகள் கடற்கரையில் வந்திறங்கியதும் பொதுமக்களே முதலில் உணவுப் பார்சல் கொடுத்து அவர்களை ஆதரிக்கின்றூர்கள்.

பிரஜைகள் குழு மூன்று தினங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை அகதிகளுக்கு வழங்குகின்றது.

அகதிகள் புனர்வாழ்வுக்கழகம், புனர்வாழ்வு நிதியம், றெட்பாறு, வை எம் சி- ஏ., சிறுவர் பாதுகாப்பு அமைப்பு, சற்றர்டேரிவியு ஸ்தாபனங்கள் தரும் உதவிகளைக்கொண்டே அகதிகளைப் பராமரித்துவருகின்றோம்

அம்பிலில் அரச உதவியுடன் வைத்தியசாலை ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலையில் பல்சிகிச்சைப் பிரிவு ஒன்றை ஆரம்பித்து உள்ளோம்.

புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு பகுதிகளில் பொது மலசல கூடங்கள் நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மூளைக் காய்ச்சலினால் ஏற்படும் அபாயங்கள் பற்றி கருத்தரங்குகள் நடத்தி வருகின்றோம்.

இப்படி திரு சந்திரசேகரி தெரிவித்தார். (இ-எ-93)

## அறவழி போராட்ட குழுவின் போட்டி

சாவகச்சேரி, ஜன 26

அறவழிப் போராட்டக் குழுவின் ஏழாண்டு சேவை நிறைவையொட்டி 'எமது மக்களின் எதிர்காலம் நோக்கி' எனும் தலைப்பில் நாடக, வில்லிசை, கவிதைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகள் பெப்ரவரி மாதம் நடுப்பகுதியில் நடைபெறும்.

வெற்றி பெறுவோருக்கான பரிசில்கள் பெப்ரவரி 25ஆம் திகதி நடைபெறும் விழாவில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது (இ-31)

# எரிபொருள் தடையால் வடபகுதி மக்கள் பட்டினி நிலையில்

## ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜன. 26

அரசின் எரிபொருள் தடையால் வடபகுதிமக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பிரஜைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக்குழு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது

அரசின் எரிபொருள் தடையால் வடபகுதி போக்குவரத்துக்கள், தொழில்கள், பாடசாலைகள், என்பன முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன

விவசாயிகள், மீனவர், தொழிலாளர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

உணவுப் பொருள்கள் விநியோகம் தடைப்பட்டதாலும், பொருள்களின் விலை உயர்ந்ததாலும் மக்கள் பட்டினி கிடக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் வெறும் அப்பாவி பொது மக்களே என்பதை அரசு கவனத்தில் கொண்டு இத் தடையை உடன் நீக்க வேண்டும்-என்று அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

பிரஜைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழு அமைப்பாளர் நாயகம் திரு. எஸ் சிவானந்தராஜா இத்தகவலைத் தெரிவித்தார். (இ-5)

## இந்தியாவுடன் சேர்ந்து ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட விரும்பாத அந்தச் சிரேஷ்ட அமைச்சர் கூறியதாக அப்பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

### வெளியுறவுக் கொள்கை

இதே போன்று, பெயரைக் குறிப்பிட விரும்பாத மற்றொரு சிரேஷ்ட அமைச்சர் பின்வருமாறு தெரிவித்ததாகவும் அந்தப் பத்திரிகையில் தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவது மட்டுமல்ல, இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் சில திட்டவட்டமான சலுகைகளையும் இந்தியா எதிர்பார்க்கிறது.

இலங்கை அரசாங்கம் பாகிஸ்தான், இஸ்ரேல் ஆகிய நாடுகளுடன் தொடர்பு கொண்டிருப்பதை இந்தியா எதிர்க்கிறது.

ஆப்கன், கம்போடியா ஆகிய நாடுகள் குறித்த எமது நிலைப்பாட்டை இந்தியா விரும்பவில்லை.

வோய்ஸ் ஒப் அமெரிக்கா வானொலி நிறுவ இடமளித்தது. திருமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு கொடுக்கத் தவறியது- ஆகியவற்றையும் இந்தியா ஆட்சேபிக்கிறது.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் நிர்ப்பந்தம் செலுத்தும் முயற்சியாக இந்தியப் பிரஜைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது.

இதனால் இலங்கையில் உள்ள இந்தியப் பிரஜைகளின் எண்ணிக்கை, இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கையிலும் பார்க்க அதிகம்.

இனப்பிரச்சினையினால் இந்தியாவில் உட் பிரச்சினைகள் நிறைய ஏற்பட்டுள்ளன.

இனப்பிரச்சினைத் தீர்வு கண்டது நானே என்று கூறி இணை அமைச்சர் ப சிதம்பரம் தமிழக முதலமைச்சராக வரத்திட்டம் திட்டப்பட்டுள்ளது. இது முதலமைச்சர் இராமச்சந்திரனுக்குப் பிடிக்கவில்லை.

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன் வந்தது இந்தியா ஆனால் இந்தியாவே இலங்கைக்குப் பிரச்சினையாக மாறிவிட்டது- என்றூர்.

"இந்தியா இலங்கையிடம் இருந்து வெளியுறவுக் கொள்கையில் சலுகைகளை எதிர் பார்ப்பதாக" அமைச்சர் காமினி திசநாயக்காவும் கூறியிருக்கிறூர்.

"இது உயர் மட்டத்தில் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்று. எனக்கு எட்டிய வரையில் இலங்கை இந்த எண்ணத்துக்கு எதிரானதாக இருக்கவில்லை அப்படிச் செய்வதற்கு ஜனாதிபதி என்றும் தயாராகவே இருக்கிறூர்.

"இப் பிராந்தியத்தின் ஒருபகுதிதான் இலங்கை. தன்னைப் பற்றி மட்டும் இலங்கை சிந்திக்க முடியாது இந்தமுழுப்பிராந்தியத்தையும் பற்றி இலங்கை சிந்திக்க வேண்டும்" என்று அமைச்சர் காமினி கூறியிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-எ)

### ஆனையிறவு..-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளதாம்.

இத்தகைய சூழ்நிலையில் என்ன செய்வது என்பது குறித்து வ பி. போ சபை உயர் அதிகாரிகள் மாநாட்டில் முடிவு செய்யப்படும் என அறியவருகிறது. (அ-இ-10)

## அகதிப் பெண்ணின் பரிதாப முடிவு

முள்ளியவளை, ஜன. 26

நிலாவெளியில் ஆயுதப்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் தனது கணவனை இழந்தவர், கடந்த வியாழன் மினிபஸ் விபத்துச் சம்பவத்தில் தனது உயிரையே இழந்தார்.

இப்படி பரிதாபமாக இறந்த பெண்ணின் பெயர் அன்னம்மா தியாகராசா, வயது 40.

நிலாவெளியில் வசித்துவந்த இவர் கணவன் சூடுபட்டு இறந்த பின்னர் இரண்டு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு முல்லைத்தீவு அகதி முகாமில் தஞ்சம் அடைந்தார்

நிலாவெளிக்குச் சென்று தனது வீட்டைப் பார்த்து வர இவர் விரும்பினுர்.

பிள்ளைகளை அகதி முகாமில் விட்டுவிட்டு அனுராதபுரம் வழியாக திருமலை நோக்கிச் சென்ற மினிபஸ் ஒன்றில் இவர் பயணம் மேற்கொண்டார். மினிபஸ் இடையில் விபத்துக்குள்ளாகியது

அதில் தலை சிதறுண்ட நிலையில் அவர் மரணமானூர்.

இறந்த பெண்ணின் சடலத்தை மினிபஸ் உரிமையாளர் மிகுந்த சிரமத்தின் மத்தியில் முல்லைத்தீவுக்குக் கொண்டு வந்து பிள்ளைகளிடம் ஒப்படைத்தார்.

முல்லைத்தீவுப் பிரஜைகள் குழு, இறுதிக் கிரியைகளுக்கான செலவுகளைப் பொறுப்பேற்றது (இ-எ-93)

## சீமெந்து தொழிற்சாலைக்கு எரிபொருள் வழங்க உத்தரவு

காங்கேசன்துறை, ஜன. 26

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்குத் தேவையான எரிபொருள் கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது

தொழிற்சாலைக்குத் தேவையான எரிபொருள், காங்கேசன்துறைமுகத்தில் இறக்கப்பட்டு, ஹாபர்வியூ ஆயுதப்படை முகாமில் சேமிக்கப்பட்டிருந்தது.

வடபகுதி மீதான எரிபொருள் தடையைத் தொடர்ந்து, இந்த எரிபொருளை சீமெந்து தொழிற்சாலைக்கு வழங்க பாதுகாப்பு அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

இதன் காரணமாக தொழிற்சாலை இயங்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

தொழிற்சாலை நிர்வாகம் மேலிடத்துடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து, சேமித்து வைக்கப்பட்டுள்ள எரிபொருளை தொழிற்சாலைக்கு வழங்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது (இ-எ-68)

## பணிப்பாளர் திடீர் விஜயம்

அச்சுவேலி, ஜன 26

யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூர் அதிகாரிகள் எவருமின்றி தனியாக புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரிக்கு திடீர் விஜயம் மேற்கொண்டார்.

ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி மற்றும் கோப்பாய் கல்வி மூலவள நிலையம் ஆகியவற்றின் செயற்பாடுகளைக் கேட்டு அறிந்து கொண்ட கல்விப்பணிப்பாளர் ஆலோசனையையும் வழங்கினூர். (இ-11)

## மட்டக்களப்பில் ஹர்த்தால் முடிவடைந்தது

யாழ்ப்பாணம், ஜன 26

மட்டக்களப்பில் மூன்று நாட்களாக நடைபெற்ற ஹர்த்தால் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்தது.

வடபகுதி மீதான எரிபொருள் தடையைக் கண்டித்து மட்டக்களப்பில் இரண்டு தினங்களாக பொதுமக்களால் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

இதனை அடுத்து மூன்றுவது நாளாக அதிரடிப் படையினரும் இப் பகுதியில் ஹர்த்தால் நடத்துவித்தனர்.

ஹர்த்தால் நாட்களின் போது குண்டு வெடிப்புகளும், துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன என்று தெரியவருகிறது. (இ-10)

## இந்திய குடியரசு தினம்

புதுடில்லி, ஜன. 26

இந்தியாவின் 37ஆவது குடியரசு தினம் இன்று திங்கள் கொண்டாடப்படுகிறது.

ஜனாதிபதி ஷெயில்சிங் நேற்று இரவு குடியரசு தினச் செய்தியை விடுத்தார்,

பாரதத்தின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க ஒவ்வொரு இந்தியனும் முன்வரவேண்டும்.

நாட்டின் சமயசார்பற்ற கொள்கைக்குவிடுக்கப்பட்டுள்ள பயமுறுத்தலை அனைவரும் ஒன்றிரண்டு எதிர்கொள்ள வேண்டும்.

ஒருநாடு, ஓர் இனம், ஒருதாய்மக்கள் என்று அனைவரும் வாழவேண்டும்.

இப்படி ஜனாதிபதி ஷெயில்சிங் தனது குடியரசு தினச் செய்தியில் தெரிவித்திருக்கிறூர். (இ-ஏ)

## வீடமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜன 26

தேசிய வீடமைப்பு அதிகார சபை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 60 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்நிதியில் பெருந்தொகையான பணம் வீடமைப்புக் கடன்களுக்காகவே வழங்கப்படும் என மட்டக்களப்பு மாவட்ட வீடமைப்பு முகாமையாளர் திரு கு. தவராசா தெரிவித்துள்ளார். (உ-5)

## எரிபொருள் தடையை நீக்க கோரிக்கை

முள்ளியவளை, ஜன 26

வடபகுதி மீதான எரிபொருள் தடையை உடனடியாக நீக்கும்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை முல்லைத்தீவுப் பிரஜைகள் குழு கேட்டுள்ளது. (இ-எ-93)

# நெருக்கடியைப் பெரிதாகக் காட்ட இந்தியா முயலுகிறது

## பாக். ஜனாதிபதி கூறுகிறுர்

இஸ்லாமபாத் ஜன 26

எல்லை நெருக்கடியை பெரிதாக்கிக் காட்டுவதில் இந்தியா அக்கறை காட்டுவதாக பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் நேற்று அறிவித்தார்.

எல்லையில் இந்திய--பாகிஸ்தான் மோதலை தவிர்த்துக்கொள்ள முடியும் என்று பகிஸ்தான் பிரதமர் முகமட் ஜுனஜோ தெரிவித்தார்.

இந்தியாவுடன் சமாதானமாக வாழவே பாகிஸ்தான் விரும்புகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியத் தீவிரவாதிகள் நடத்தும் போராட்டத்தில் பாகிஸ்தானுக்கு அக்கறை எதுவும் கிடையாது என்றும் பிரதமர் ஜுனஜோ வலியுறுத்தினுர். (இ-எ)

## 5 மணி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பரந்தனிலும், வேறு பகுதிகளில் உள்ள பாடசாலைக் கட்டடங்களிலும் தங்கவேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது

நேற்றும் ஐந்து மணிக்குப் பின்னர் வந்த பயணிகள் வாகனங்களை சிப்பாய்கள் முகாமைக் கடந்து செல்ல விடாமல் திருப்பி அனுப்பினர். (இ-10)

# பாகிஸ்தானுக்கு நட்வர்சிங் அழைப்பு

## பேச்சுவார்த்தை நடத்த

புதுடில்லி, ஜன. 26

எல்லை நெருக்கடியைத் தணிக்கும் முயற்சியாக செயலாளர் மட்டத்திலான அவசரப் பேச்சுக்களை நடத்த பாகிஸ்தான் முன்வரவேண்டும் என்று இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் நட்வர்சிங் நேற்று அழைப்பு விடுத்தார்.

புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரை அழைத்து திரு. நட்வர்சிங் இதனைத் தெரிவித்தார்.

இந்த உயர்மட்டப் பேச்சுக்கள் புதுடில்லியில் நடைபெற வேண்டும் என்றும் திரு. நட்வர்சிங் தெரிவித்தார்.

இந்தியக் குழுவுக்கு வெளியுறவுச் செயலாளர்களில் ஒருவரான திரு கொன்ஸ்லேவ் தலைமை வகிப்பார் என்றும் திரு. நட்வர்சிங் அறிவித்தார்,

இந்திய எல்லைப் புறத்தில் இருந்து விரைவாக பாகிஸ்தானிய துருப்புக்கள் அகற்றப்பட வேண்டும் என்றும் திரு. நட்வர்சிங் பாகிஸ்தான் தூதரைக் கேட்டுக் கொண்டார்.

இந்தியாவின் அழைப்பைத் தனது அரசுக்கு அனுப்பி வைப்பதாகப் பாகிஸ்தான் தூதர் தெரிவித்தார். (இ-எ)

## டோர்ச் லையிற்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டனர். இடத்தை நோக்கி சரமாரியாகச் சுட்டனர். தொடர்ந்து இராணுவ முகாமில் இருந்து ஷெல் ஏவப்பட்டது.

பின்னர் விசாரணை செய்து பார்த்ததில் மரப்பொந்தில் டோர்ச்லையிற் வெளிச்சத்தில் கிளி பிடித்துக் கொண்டு இருந்தவரை நோக்கியே படையினர் துப்பாக்கியால் சுட்டனர் என்று தெரியவந்தது இதில் எவரும் காயமடையவில்லை (இ-எ 93)

**DEEPFREEZERS FOR SALE**

மிக நல்ல நிலையிலுள்ள மூன்று Deep-freezers விற்பனைக்குள்ளன. விபரங்களுக்கு உடனே தொடர்பு கொள்க. விளம்பர எண் 53, மே/பா உதயன், யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 26 - 01 - 1987 தொலைபேசி இல. 24805, 22078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60 N 86. Telephone, 24805, 22078.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org